முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விகாரி வைகாசி மாதம் 19ம் திகதி முதல் வைகாசி மாதம் 26ம் திகதி வரை ஜூன் 02ம் திகதி முதல் ஜூன் 09ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **தருமவேலி கொண்ட தமிழகமே**
**தாயகம் எனும் பாரதமே**
**பெருமைமிகு ஆன்மீகம் நிறைந்த**
**பரதம் தமிழகம் தன்னில்**

**2.** **தன்னிலே இந்த வார நிகழ்வாக**
**தக்க விகாரி விடை திங்களில்**
**நன்னயமாய் மூவாறோர் திகதி மேல் இருபானை திகதி வரை**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 19ம் நாள் 02.06.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 26ம் நாள் 09.06.2019, ஞாயிறு முடிய)**
**நடக்கும் எதிர்கால பலனாக**

**3.** **ஆசியை சுப்பிரமணியர் யானும் அருள்வேன்**
**ஆன்மீக ஞான பூமியாக**
**பேசிட பரதம் தமிழகம் நிலை உயரும்**
**பிரச்சனைகள் எனும் உலக இயல்பு**

**4.** **இயல்பு நிலைகள் யாவும் அகற்றி**
**இனி மேம்பட வழிகள் கூடும்**
**தயவுமிக்க ஆளுமைகள் கூடியே**
**தமிழகம் இந்தியா தலை நிமிரும்**

**5.** **தலைநிமிரும் உலக நாடுகளும்**
**தாமுரைப்பேன் வியக்கும் வண்ணம்**
**தலை நிமிரும் வளரும் பரதமும்**
**தகாத எதிர்மறை செயல்கள் புரியும்**

**6.** **புரிகின்ற அண்டை நாடுகளும்**
**புரிதல் கொண்டு சமத்துவ நிலைக்கு**
**வருமுலகில் வருதல் காணும்**
**வரிச்சுமை தனை சுய தேசமதில் அகற்றி**

7. அகற்றி மக்களை நோக்கி
ஆதரவும் பாதுகாப்பும் மிக்க
வகையான ஆளுமை பெருக்கி
வல்லமைமிக்க பிராந்தியங்கள் அனைத்தும்

8. அனைத்தும் சமமான நிலையில்
அரவணைத்து ஆளுமை கூட்டிட
இணையிலா சக்தியாக வருமுலகில்
இந்தியா உயரும் மலரும்

9. மலர்ந்த இயற்கை வளங்களை
மண்ணை கழனியை போற்றும்
வளர்ந்த சக்தியாக ஆளுமை காண
வல்லரசு படைக்கும் பரதம் தானே

10. தானாக மாற்றங்கள் நிகழ
தவசி அரங்கன் ஞான தயவு வழி
பேணவே ஆளுபவர்கள் ஏற்று வர
பரதம் தமிழகம் புண்ணிய பூமியாக சிறக்கும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :

விகாரி வருடம் வைகாசி மாதம் 19ம் நாள் 02.06.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 26ம் நாள் 09.06.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்

தருமங்கள் அதிகமாக செய்து தருமவேலியினை உடைய தமிழக தேசமே தாயகம் எனும் தாய் நாடாகிய பாரத தேசமே பெருமைமிக்க ஆன்மீக ஆன்றோர்களை கொண்டதும் ஆன்மீகத்தில் உயர்ந்தும் நிற்கின்ற தமிழக பாரத தேசங்களில் விகாரி வருடம் வைகாசி மாதம் 19ம் நாள் 02.06.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 26ம் நாள் 09.06.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இனி வருங்காலங்களில் தமிழகமும் பாரததேசமும் ஆன்மீக ஞானபூமியாக நிலை உயர்வடையும். மக்களின் பிரச்சனைகள் என்கின்ற உலகியல் இயல்பு நிலைகள் எல்லாம் அகன்று இனி வருங்காலங்களில் மெல்ல மெல்ல உயர்வடைவதற்கான வழிகள் நாட்டினில் உண்டாகிடும். தயவு உணர்வு கொண்டு ஆட்சியாளர்கள் செயல்பட தயவுடைய ஆட்சியாளர்களின் செயல்பாடுகளில் தமிழகமும் தாயகம் இந்திய தேசமும் இனி தலை நிமிரும்.

இனி வருங்காலம் இந்திய தேசம் உலக நாடுகளெல்லாம் வியக்கும் வண்ணம் தலை நிமிரத் துவங்கும். நல்ல வளர்ச்சி நிலைகள் நாட்டினில் உருவாகும். இந்திய தேசத்திற்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் தகாத செயல்களையும் இந்திய தேசத்திற்கு எதிரான செயல்களையும் புரிகின்ற அண்டை தேச நாடுகளும் இந்தியாவின் வல்லமைகளை புரிந்து கொண்டு சமாதானமாக ஆகிட பேச்சு வார்த்தைகளை நடத்தி சமத்துவ நிலைக்கு முயற்சிக்கும்.

இந்திய தேசத்தினில் இந்திய மக்களின் மீது விதிக்கப்படும் உள்நாட்டு வரிச்சுமைகளை குறைத்தும், சில இனங்களில் வரிச்சுமை இல்லாமலும் செய்து இந்திய தேச மக்களுக்கு ஆதரவையும் பாதுகாப்பையும் தருகின்ற முறையிலே ஆட்சியாளர்கள் மக்கள் மீது கனிவுடன் நடந்து நல்லாட்சி புரிந்தும் மாநிலங்கள் அனைத்தையும் சமமாக பாவித்து வல்லமையுடன் அரவணைத்து ஆட்சி செய்தும் மத்தியில் ஆளுவோர் ஆட்சி புரிந்து வர, இந்திய தேசம் இணையில்லாத தேசமாக மாபெரும் சக்தியாக வருங்காலங்களில் உயர்வடையும், நாட்டினில் பலவிதமான முன்னேற்றங்கள் உருவாகும்.

ஆட்சி புரிவோர் நாட்டினில் உள்ள இயற்கையை அழிக்காமல் இயற்கை வளங்களை பாதுகாத்தும் விவசாய மக்களுக்கு ஆதரவாக செயல்பட்டு விவசாயம் பெருகிடவும் விவசாய நிலங்களை பாதுகாக்கவும் செய்யும்படியாக விவசாயிகளுக்கு நன்மை புரிகின்ற ஆட்சியாக ஆட்சி புரிந்தால் பாரததேசம் வல்லரசாக மாறும் வல்லமை பெறும்.

நாட்டினில் நல்ல மாற்றங்களெல்லாம் உருவாகிட மகா ஞான தவசி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறுகின்ற தயவின் அடிப்படையில் அமைந்திட்ட ஞானவழியினை தேச மக்களும் பொறுப்பில் உள்ளோரும் கடைப்பிடித்திட்டால் தமிழகமும் பாரத தேசமும் புண்ணிய பூமியாக ஞானபூமியாக மாறிடும் எனக் கூறுகின்றார் தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–